தினமலர் 01/08/2019

# ஆசிரியர் காலியிடம் யு.ஜி.சி., அறிவுரை

திருப்பூர், ஆக. 1–

பல்கலை மானியக் குழு(யு.ஜி.சி.,) செயலர் ரஜ்னீஷ் ஜெயின், நாடு முழுவதும் உள்ள அனைத்து பல்கலைகளுக்கும் நேற்று அனுப்பிய கடிதம்:

தகுதியான ஆசிரியர் குறைபாட்டால், உயர் கல்வி நிலையங்களில், கல்வித்தரம் பாதிக்கப்பட்டுவருகிறது. எனவே, ஆசிரியர்கள் தேர்வு நடைமுறை, வழிகாட்டுதல் நெறிமுறைப்படி, குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

அனைத்து பல்கலை மற்றும் இணைப்புக்கல்லூரிகள், ஆசிரியர் காலியிடங்களை இட ஒதுக்கீட்டுடன் குறிப்பிட்டு, https://nherc.in. என்ற இணையதளத்தில் பதிவேற்ற வேண்டும்.

இவ்வாறு, கடிதத்தில் கூறியுள்ளார்.